Equifax

sidbi



# மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ்

தொகுதி X – நவம்பர் 2021

## ஈக்விஃபாக்ஸ்

**கிரண் சமுத்ராலா**
துணைத் தலைவர் –
பகுப்பாய்வு
kiran.samudrala@equifax.com

**ஸ்ருதி ஜோஷி**
உதவி துணைத்தலைவர்–
பகுப்பாய்வு
shruti.joshi@equifax.coம

**வந்தனா பாஞ்சால்**
மூத்த நிர்வாகி. – பகுப்பாய்வு
vandana.panchal@equifax.com

## சிட்பி

**சந்திர சேகர் தான்வி**
தலைமை பொது மேலாளர் –
எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ
erdav@sidbi.in

**ரங்கதாஸ் பிரபாவதி**
துணை பொது மேலாளர்
எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ
erdav@sidbi.in

**ரமேஷ் குமார்**
மேலாளர்
எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ

rameshk@sidbi.in

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிர்வாகச் சுருக்கம் | 03 |
| சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம் | 04 |
| குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம் | 05 |
| விநியோக போக்குகள் | 08 |
| தொழில்துறை இடர் தோற்றவிவரம் | 12 |
| புவியியல் வெளிப்பாடு | 14 |
| கடன் பெறுநரின் பரவல் | 17 |
| விரிவான மாநில தோற்றம் : ஒடிசா | 20 |
| லட்சிய மாவட்டங்கள் | 25 |

# நிர்வாகச் சுருக்கம்

*1990 களின் முற்பகுதியில் குறுநிதி நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெற்றன மற்றும் கடந்த சில ஆண்டுகளில் இது அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது. மைக்ரோஃபினான்ஸ் பல்ஸின் 10வது பதிப்பு, 30 ஜூன் 2021 நிலவரப்படி தரவுச் சமர்ப்பிப்பின் அடிப்படையில் குறுநிதி துறையின் வளர்ச்சியை உள்ளடக்கியது.*

*ஜூன் 30, 2021 நிலவரப்படி, MFI தொழில்துறையின் போர்ட்ஃபோலியோ நிலுவையில் ரூ.222,060 கோடியாக உள்ளது. இதில் வங்கிகள் மற்றும் NBFC-MFIகள் 75%க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றன. மார்ச் 2021 இலிருந்து ஜூன் 2021 இல் நிலுவையிலுள்ள போர்ட்ஃபோலியோ 11% குறைந்துள்ளது. லாப நோக்கு அல்லாத MFIகள் ஜூன் 2020 முதல் ஜூன் 2021 வரை 11% ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) வளர்ச்சியைக் கண்டன. அதைத் தொடர்ந்து வங்கிகள் 4% வளர்ச்சியைக் கண்டன.*

*சர்வதேச தொற்றுநோய் பரவலின் இரண்டாவது அலை காரணமாக AMJ'21 இன் போது பணப் பரிமாற்றங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, இருப்பினும், AMJ'20 இல் இருந்ததைப் போல் தாக்கம் கடுமையாக இல்லை. AMJ'20 உடன் ஒப்பிடும்போது, AMJ'21 இல், 300% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுடன், ரூபாய் 25,808 கோடி மதிப்பிலான கடன்களை குறுநிதித் துறை வினியோகித்துள்ளது.*

*கடந்த ஜூன் 2021 லிருந்து மார்ச் 2021 வரையான காலகட்டத்தில் கடனை திருப்பிசெலுத்த வேண்டிய காலம் 1-179 கடந்த நாட்கள், 13.59% லிருந்து 31.44% ஆக அதிகரித்துள்ளது. வங்கி சாரா நிதி நிறுவனங்கள் - குறுந்தொழில் நிதி நிறுவனங்கள் (NBFC-MFI), வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் லாபத்திற்காக அல்லாத குறுந்தொழில் நிதி நிறுவனங்களின் (Not for Profit MFI) 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், தொழில்துறையில் ஏற்பட்ட தவறுதல்களுடன் ஒப்பிடும்போது குறைவாக உள்ளது.*

*ஜூன் 30, 2021 நிலவரப்படி, மேற்கு வங்கம், தமிழ்நாடு, பீகார், கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை முதல் 5 மாநிலங்களாக உள்ளன. மேற்கு வங்கம் ரூ.31,024 கோடி நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவுடன் முன்னணியில் உள்ளது மற்றும் மேற்கு வங்கத்தின் 90+ நாட்கள் தவணை தவறிய கடன்கள் 5.15% ஆகும், இது தொழில்துறையின் தவறுதல்களை விட அதிகமாகும்.*

*இந்த அறிக்கை ஒடிசாவின் விரிவான மாநில விவரங்களை உள்ளடக்கியது. ஜூன் 30, 2021 நிலவரப்படி ஒடிசாவின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ.13,096 கோடி. நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில் 85% வங்கிகள் மற்றும் NBFC-MFI களின் சந்தைப் பங்காகும். AMJ' 21 இன் போது ஒடிசாவின் கடன் வழங்கல் தொகையானது ரூ.2,127 கோடி ஆகும். இதில் வங்கிகளின் பங்களிப்பு அதிகம். ஒடிசாவில் 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், ஒட்டுமொத்த தொழில்துறையின் தவறுதல்களை விட குறைவாக உள்ளது.*

*கடன்களின் எண்ணிக்கை மற்றும் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ஆகியவற்றின் அடிப்படையில் கடன் வாங்குபவரின் பரவலின் பகுப்பாய்வையும் இந்த அறிக்கை அளிக்கிறது. 42% வாடிக்கையாளர்களுக்கு 3 அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கள் உள்ளன. அதிக எண்ணிக்கையிலான கடன் வாங்குபவர்கள் வங்கிகள் மற்றும் NBFC களின் கீழ் கடன் பெற்றவர்களாவார்கள். 66% கடன் வாங்குபவர்கள், நிலுவையில் உள்ள கடன் ரூ.10000-50000 பிரிவின் கீழ் உள்ளனர். கடன் வாங்கியவர்களில் 15% பேர் ரூ.50,000க்கும் அதிகமான நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ பிரிவின் கீழ் உள்ளனர்.*

# சொல் சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம்

- *ATS (Average Ticket Size) = Disbursed Amount/Number ofLoans*
  *(சராசரி கடனின் அளவு) = வினியோகிகப்பட்ட தொகை / கடன்களின் எண்ணிக்கை*
- *DPD = Days PastDue -* திருப்பிசெலுத்த வேண்டிய காலம் கடந்த நாட்கள்
- *Live POS or Borrowers or Active loans = 0 to 179 DPD + New Accounts + Current Accounts*
  நேரடி நிலுவையில் உள்ள கடன்கள் (அ) கடனாளிகள் (அ) செயலில் உள்ள கடன்கள் = 0 லிருந்து 179 DPD + புதிய கணக்குகள் + நடப்புக் கணக்குகள்
- *MFI = Microfinance Institution* குறுந்தொழில் நிதி நிறுவனம்
- *POS = Portfolio Outstanding* நிலுவையில் உள்ள கடன்களின் போர்ட்ஃபோலியோ
- *UT = Union Territory* யூனியன் பிரதேசம்
- *AspirationalDistricts(AD)-* லட்சிய மாவட்டங்கள்
  சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர் வளங்கள், நிதி சேர்க்கை, திறன் வளர்ச்சி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற கூட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில், மனித மேம்பாட்டு குறியீட்டை மேம்படுத்துவதற்காக ஜனவரி 2018 இல் NITI ஆயோக், இந்திய அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட மாவட்டங்கள் (தற்போதைய எண்ணிக்கை 117).
- *1-179 = 1 to 179 DPD/Live POS*
- *1-29 = 1 to 29 DPD/Live POS*
- *30-59=30to59DPD/LivePOS*
- *60-89=60to89DPD/LivePOS*
- *90-179 = 90 to 179 DPD/Live POS*
- 30+ நாட்கள் தவணை தவறுதல் *(Delinquency) = 30-179 DPD/Live POS*
- 90+ நாட்கள் தவணை தவறுதல் *(Delinquency) = 90-179 DPD/Live POS*

- *AMJ'20 =* ஏப்ரல் 2020 முதல் ஜூன் 2020 வரை
- *JAS'20 =* ஜூலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை
- *OND'20 =* அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 வரை
- *JFM'21 =* ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை
- *AMJ'21 =* ஏப்ரல் 2021 முதல் ஜூன் 2021 வரை




# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

# குறுநிதி தொழில்துறையின் சாராம்சம்

## 30 ஜூன் 2021 நிலவரப்படி

| 30th June 2021 | BANKS | SFBs | NBFC-MFIs | NBFCs | Not for profit MFIs | Total Industry |
|---|---|---|---|---|---|---|
| தனித்துவ செயலில் உள்ள | 25,248 | 12,630 | 23,466 | 6,604 | 793 | 68,741 |
| செயலில் உள்ள கடன் கள் (ரூ. ஆயிரத்தில் ) | 37,204 | 15,630 | 34,846 | 7,162 | 1,021 | 95,863 |
| போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில் ) | 95,674 | 35,345 | 72,856 | 16,140 | 2,045 | 222,060 |
| வினியோகிக்கபட்ட தொகை (ரூ. கோடியில் ) AMJ'21 | 14,763 | 3,402 | 6,073 | 1,131 | 439 | 25,808 |
| சராசரி கடன் அளவு (ரூ. ` ) AMJ'21 | 35,609 | 38,724 | 35,356 | 41,048 | 34,007 | 36,112 |
| 30+ நாட்கள் தவணை தவறுதல்கள் (POS) | 17.15% | 22.95% | 10.67% | 14.30% | 3.26% | 16.54% |
| 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் (POS) | 3.17% | 3.22% | 1.97% | 3.00% | 0.87% | 3.01% |




- ஜூன் 30, 2021 நிலவரப்படி, MFI தொழில்துறையின் போர்ட்ஃபோலியோ 222,060 கோடியாக உள்ளது, வங்கிகள் மற்றும் NBFC-MFIகள் 75% க்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டுள்ளன.
- AMJ'21 இன் போது வழங்கப்பட்ட தொகை ரூ 25,808 கோடி, இதில் வங்கிகள் 57% பங்களிப்பதன் மூலம் முன்னணியில் உள்ளன மற்றும் NBFC-MFIகள் 24% இல் இரண்டாவது அதிக பங்களிப்பாளர் ஆகும்.
- அனைத்து கடன் வழங்குபவர்களிலும், என்.பி.எஃப்.சி களின் சராசரி கடன் அளவு அதிகமாக உள்ளது மற்றும் இது தொழில்துறையின் சராசரி கடன் அளவை விட அதிகமாக உள்ளது
- என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ, என்.பி.எஃப்.சி. மற்றும் லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐகளின் 30+ நாட்கள் மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் ஒட்டுமொத்த தொழில்துறையின் தவறுதலை விட குறைவாக உள்ளது.


குறிப்பு: MFI பிரிவில் ~6 கோடி தனிப்பட்ட நேரடி கடன் வாங்குபவர்கள் உள்ளனர். SFBகள், வங்கிகள், NBFC-MFIகள், NBFCகள் மற்றும் லாபத்திற்காக அல்லாத MFIகள் ஆகியவற்றுடன் வாடிக்கையாளர்கள் பல உறவுகளைக் கொண்டிருப்பதால் தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் வேறுபாடு உள்ளது

# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ
**(ரூ. கோடியில்)**

| விவரங்கள் | ஜூன் '20 | செப்'20 | டிச.'20 | மார்ச் '21 | ஜூன் '21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 91,920 | 93,409 | 96,683 | 109,867 | 95,674 |
| சிறுநிதி வங்கிகள் | 39,225 | 42,682 | 38,109 | 38,903 | 35,345 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 71,342 | 70,142 | 73,166 | 79,420 | 72,856 |
| என்.பி.எஃப்.சி | 19,875 | 19,838 | 18,988 | 18,992 | 16,140 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 1,842 | 1,772 | 1,872 | 2,095 | 2,045 |
| மொத்த தொழில் துறை | 224,204 | 227,843 | 228,818 | 249,277 | 222,060 |
| காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சி விகிதம் % | - | 2% | 0% | 9% | -11% |

**கடன் வழங்குபவர் வகையின்படி சந்தைப் பங்கு போக்குகள்**




- *மார்ச் 2021 இலிருந்து ஜூன் 2021 இல் போர்ட்ஃபோலியோ நிலுவைத் தொகை 11% குறைந்துள்ளது*
- *லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ கள் ஜூன் 2020 முதல் ஜூன் 2021 வரை 11% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் கண்டது, அதைத் தொடர்ந்து 4% வளர்ச்சியுடன் வங்கிகள் உள்ளன.*




# விநியோக போக்குகள்

# விநியோக போக்குகள் - நிறுவனவாரியாக

**விநியோகிக்கப்பட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)**

| கடன் வழங்குபவர் வகை | AMJ'20 | JAS'20 | OND'20 | JFM'21 | AMJ'21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 14 | 47 | 102 | 113 | 41 |
| சிறுநிதி வங்கிகள் | 5 | 12 | 20 | 31 | 9 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 2 | 33 | 65 | 80 | 17 |
| என்.பி.எஃப்.சி | - | 5 | 8 | 11 | 3 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 2 | 2 | 2 | 3 | 1 |
| மொத்த தொழில் துறை | 23 | 99 | 197 | 238 | 71 |

## கடன் வழங்குபவர் வகையின்படி சந்தைப் பங்கு போக்குகள்





- *AMJ'21* இன் போது விநியோகிக்கப்பட்ட தொகையான *25,808* கோடி ரூபாய், *AMJ'20* லிருந்து மதிப்பில் *300* சதவிகிதமும் , அளவில் *209%* சதவிகிதமும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுற்றுள்ளது.
- தொற்றுநோயின் இரண்டாவது அலை காரணமாக *AMJ'21* இன் போது பணப்பரிமாற்றங்கள்/ கடன் விநியோகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, இருப்பினும், *AMJ'20* இல் இருந்ததைப் போல் தாக்கம் கடுமையாக இல்லை.
- விநியோகிக்கப்பட்ட கடன் தொகைக்கான அதிகபட்ச பங்களிப்பு வங்கிகளில் இருந்தும், அதைத் தொடர்ந்து *NBFC-MFI* களிடம் இருந்தும் வருகிறது.

# தொழில்துறையின் கடன் அளவு போக்குகள்

*வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)*

| கடன் அளவு வளர்ச்சி விகிதம் | AMJ'20 | JAS'20 | OND'20 | JFM'21 | AMJ'21 | ஆண்டுக்கு ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| 0K - 10K | 2 | 4 | 34 | 19 | 8 | 300% |
| 10K -20K | 10 | 15 | 20 | 19 | 7 | -30% |
| 20K -30K | 2 | 19 | 33 | 40 | 12 | 500% |
| 30K -40K | 3 | 24 | 44 | 60 | 17 | 467% |
| 40K -50K | 2 | 18 | 29 | 38 | 11 | 450% |
| 50K -60K | 2 | 10 | 18 | 28 | 8 | 300% |
| 60K | 2 | 9 | 19 | 34 | 8 | 300% |
| Total | 23 | 99 | 197 | 238 | 71 | 209% |
| Q-O-Q loan disbursal growth | - | 330% | 99% | 21% | -70% | - |
| All india ATS (`) | 28,578 | 35,501 | 33,193 | 39,556 | 36,112 | - |
| Q-O-Q loan ATS growth rate % | - | 24% | -7% | 19% | -9% | - |




- *ரூ.30000-ரூ.40000 உள்ள கடன் அளவு வகையின் கீழ் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்படுகின்றன .*
- *AMJ' 21 இன் போது கோவிட் இன் இரண்டாவது அலை தொழில்துறையை பாதித்தது. AMJ'21 இன் போது பெறப்பட்ட கடன்கள் JFM'21 இன் போது பெறப்பட்ட கடன்களில் 30% ஆகும்.*
- *சராசரி கடன் அளவும்  ஜேஎஃப்எம்' 21ல் ரூ.39,556ல் இருந்து ஏஎம்ஜே'21ல் ரூ.36,112 ஆகக் குறைந்துள்ளது.*




# தொழில்துறை இடர் தோற்றவிவரம்

EQUIFAX


Powering the World with knowledge™

# தவணை தவறுதல்களின் போக்குகள்

தவணை தவறிய நாட்களின் படி

| அறிக்கையின் காலாண்டு er | 1-29 days past due | 30-59 days past due | 60-89 days past due | 90-179days past due | 1-179days past due |
|---|---|---|---|---|---|
| ஜூன் '20 | 1.30% | 1.03% | 0.43% | 0.43% | 3.19% |
| செப். '20 | 15.35% | 3.47% | 0.39% | 0.63% | 19.84% |
| டிச. '20 | 7.50% | 4.73% | 3.49% | 4.96% | 20.68% |
| மார்ச் '21 | 4.55% | 2.90% | 2.01% | 4.12% | 13.58% |
| ஜூன் '21 | 14.90% | 10.14% | 3.38% | 3.01% | 31.43% |

**கடந்த நாட்களின் படி தவறிய**




- *1-179 நாட்கள் கடந்த தவணை கட்டத்தவறிய நிலுவைத் தொகை மார்ச் 2021 இல் இருந்த 13.59%லிருந்து ஜூன் 2021 இல் 31.44% ஆக அதிகரித்துள்ளது.*
- *90-179 நாட்கள் தவணை கட்ட தவறியவர்களின் அளவைவிட மற்ற அனைத்து தவணை தவறுதல்களும் மார்ச் 2021ஐ விட ஜூன் 2021 இல் அதிகரித்துள்ளன.*


*தவறுதல்கள் கணக்கிடப்பட்ட நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ அடிப்படையில்*



# புவியியல் வெளிப்பாடு


## மாநிலம்/யூனியன் பிரதேச வாரியான நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ

## ஜூன் 30, 2021 நிலவரப்படி




- *30 ஜூன் 2021 அன்று நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில், மேற்கு வங்கம், ரூ. 31,024 கோடி கடன் நிலுவையுடன், 14% பங்களித்து, முன்னணியில் உள்ளது.*
- *போர்ட்ஃபோலியோ நிலுவையில், 80% க்கும் அதிகமான பங்களிப்பை முன்னணி 10 மாநிலங்கள் வழங்குகின்றன.*
- *மேற்கு வங்காளம், தமிழ்நாடு, பீகார், கர்நாடகா மற்றும் உத்தரபிரதேசம் ஆகியவை ஜூன் 30, 2021 நிலவரப்படி முதல் 5 மாநிலங்கள்*

## *30 ஜூன் 2021 நிலவரப்படி, மாநிலம் / யூனியன் பிரதேச வாரியாக 90+ நாட்கள் தவணை தவறுதல்கள்*




- *ஜூன் 2021 நிலவரப்படி, மேற்கு வங்காளத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் 5.15% ஆகும். இது தொழில்துறையின் தவணை தவறுதல்களை விட அதிகமாகும்*
- *மீதமுள்ள கீழ்வரும் முதல் 4 மாநிலங்களில் ஜூன் 2021 நிலவரப்படி 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் தொழில்துறையை விட குறைவாக உள்ளன:*
  *தமிழ் நாடு – 2.62%*
  *பீகார் – 1.76%*
  *கர்னாடகா – 1.83%*
  *உத்திர பிரதேசம் – 1.08%*




# கடன்பெறுநரின் பரவல்

# கடன்களின் எண்ணிக்கை வாரியாக கடன்பெறுபவரின் பரவல்

கடன்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தற்போதுள்ள கடன்பெறுபவர்களின் பரவல்

| கடன் வழங்குபவர் வகை | Customer with 1 Loan (in '000) | Customer with 2 Loans (in '000) | Customers with 3 or more loans (in '000) |
|---|---|---|---|
| வங்கிகள் | 8,533 | 3,921 | 12,794 |
| சிறுநிதி வங்கிகள் | 4,992 | 2,842 | 4,796 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 3,889 | 1,579 | 1,136 |
| என்.பி.எஃப்.சி | 8,458 | 5,245 | 9,763 |
| லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 316 | 153 | 324 |
| மொத்தம் | 26,188 | 13,740 | 28,813 |





- *42% வாடிக்கையாளர்களுக்கு 3 அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கள் உள்ளன*
- *அதிக எண்ணிக்கையிலான கடன் வாங்குபவர்கள் வங்கிகள் மற்றும் NBFC களின் கீழ் கடன் பெற்றவர்களாவார்கள்*

# நிலுவையிலுள்ள போர்ட்ஃபோலியோ வாரியாக கடன் பெறுபவர்களின் பரவல்

நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியொ வாரியாக தற்போதுள்ள கடன் பெறுபவரின் பரவல்

| கடன் வழங்குனர் வகை | <10K | 10K-25K | 25K-50K | >=50K |
|---|---|---|---|---|
| வங்கிகள் | 4,889 | 8,185 | 6,714 | 5,460 |
| குறு நிதி வங்கிகள் | 2,184 | 4,338 | 4,855 | 1,254 |
| என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ | 1,379 | 2,540 | 2,337 | 348 |
| என்.பி.எஃப்.சி | 4,355 | 8,115 | 7,778 | 3,218 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 192 | 280 | 220 | 100 |
| மொத்தம் | 12,999 | 23,458 | 21,904 | 10,380 |





- *66% கடன் வாங்குபவர்கள் ரூ.10000 முதல் -50000 வரை நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ வகையின் கீழ் உள்ளனர்*
- *கடன் வாங்கியவர்களில் 15% பேர் ரூ.50,000க்கும் அதிகமான கடன் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் கீழ் உள்ளனர்*



# விரிவான மாநில தோற்றம் : ஒடிசா

# ஒடிசா : மாநில தோற்றம்

| Odisha view as on 30th June 2021 | Banks | SFBs | NBFC MFIs | NBFCs | Not for Profit MFIs | Industry |
|---|---|---|---|---|---|---|
| செயலில் உள்ள கடன்கள் ('000) | 2,773 | 553 | 2,379 | 316 | 9 | 6,030 |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்) | 5,880 | 1,169 | 5,285 | 748 | 14 | 13,096 |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் சந்தை பங்கு | 45% | 9% | 40% | 6% | 0% | - |
| வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) - AMJ’21 | 1,340 | 117 | 597 | 72 | 1 | 2,127 |
| சராசரி கடன் அளவு (ரூ.) - AMJ’21 | 31,360 | 31,846 | 37,340 | 43,021 | 35,000 | 33,188 |
| 30+ நாட்கள் தவறியது (POS) | 9.65% | 10.10% | 12.33% | 5.69% | 5.25% | 10.54% |
| 90+ நாட்கள் தவறியது (POS) | 2.06% | 2.73% | 2.83% | 1.54% | 1.91% | 2.40% |





- ஜூன் 30, 2021 நிலவரப்படி ஒடிசாவின் போர்ட்ஃபோலியோ நிலுவையில் உள்ள தொகை ₹13,096 கோடி
- நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ சந்தைப் பங்கில் 85% வங்கிகள் மற்றும் NBFC-MFI கள்
- AMJ’ 21 இன் போது ஒடிசாவின் விநியோகத் தொகை வங்கிகளின் அதிக பங்களிப்புடன் 2,127 கோடி ரூபாய்.
- ஒடிசாவில் 30+ நாட்கள் மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் ஒட்டுமொத்த தொழில்துறையின் தவறுதலை விட குறைவாக உள்ளது
- அனைத்து கடன் வழங்குபவர்களிலும் NBFC களின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் மிகக் குறைவு மற்றும் ஒடிசாவின் ஒட்டுமொத்த 90+ நாட்கள் தவறுதல்களுடன் ஒப்பிடும்போது இது குறைவு.

# ஒடிசா: சராசரி கடன் அளவு போக்குகள்

*சராசரி கடன் அளவு போக்குகள்*

| Ticket size | AMJ'20 | JAS'20 | OND'20 | JFM'21 | AMJ'21 | Y-o-Y growth rate |
|---|---|---|---|---|---|---|
| BANK | 23,801 | 32,555 | 24,430 | 32,351 | 31,360 | 32% |
| SFB | 36,113 | 29,472 | 32,570 | 30,029 | 31,846 | -12% |
| NBFC-MFIs | 37,991 | 34,814 | 32,603 | 33,818 | 37,340 | -2% |
| NBFC | 20,570 | 37,604 | 41,355 | 41,982 | 43,021 | 109% |
| Not for profit MFIs | 16,875 | 29,959 | 31,064 | 29,893 | 35,000 | 107% |
| Odisha | 25,634 | 33,598 | 28,070 | 32,995 | 33,188 | 29% |


**ஒடிசா : சராசரி கடன் அளவு போக்குகள்**




- ஒடிசாவின் ஒட்டுமொத்த சராசரி கடன் அளவு *AMJ'20* இலிருந்து *AMJ'21* வரை *29%* வளர்ச்சியைக் கண்டது.
- ஒடிசாவில் என்.பி.எஃப்.சி.களின் சராசரி கடன் அளவு அதிகமாக உள்ளது. அதை தொடர்ந்து என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ களின் கடன் அளவு அதிகமாக உள்ளது.
- *NBFC*கள் *AMJ'20* இலிருந்து *AMJ'21* வரை *109%* ஆண்டுக்கு ஆண்டு *(Y-o-Y)* வளர்ச்சியைக் கண்டன, அதைத் தொடர்ந்து *107%* இல்லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ கள் உள்ளன.

# ஒடிசா : போர்ட்ஃபோலியோ போக்குகள்


| விவரங்கள் | ஜூன் '20 | செப். '20 | டிச.'20 | மார்ச் '21 | ஜூன் '21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 5,433 | 5,280 | 5,403 | 6,242 | 5,880 |
| சிறுநிதி வங்கிகள் | 1,120 | 1,153 | 1,179 | 1,283 | 1,169 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 5,125 | 5,342 | 5,617 | 5,793 | 5,285 |
| என்.பி.எஃப்.சி | 752 | 771 | 801 | 840 | 748 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 16 | 11 | 28 | 20 | 14 |
| ஒடிசா | 12,446 | 12,557 | 13,028 | 14,178 | 13,096 |
| காலாண்டுக்கு காலாண்டு (Q-o-Q) வளர்ச்சி விகிதம் % | - | 1% | 4% | 9% | -8% |




- ஜூன் 2020 முதல் ஜூன் 2021 வரை ஒடிசாவின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ 5% அதிகரித்துள்ளது.
- அனைத்து காலாண்டுகளிலும் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில் 40%க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குவதன் மூலம் வங்கிகள் முன்னணியில் உள்ளன.

# 90+ நாட்கள் தவணை தவறுதலின் போக்கு – ஒடிசா

| Lender Type | Jun'20 | Sep'20 | Dec'20 | Mar'21 | Jun'21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 0.13% | 0.18% | 3.75% | 2.82% | 2.06% |
| சிறுநிதி வங்கிகள் | 0.51% | 0.12% | 5.46% | 3.18% | 2.73% |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 0.73% | 0.89% | 9.49% | 3.12% | 2.83% |
| என்.பி.எஃப்.சி. | 0.33% | 0.09% | 2.48% | 3.81% | 1.54% |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 0.25% | 1.03% | 1.56% | 3.28% | 1.91% |
| ஒடிசா | 0.42% | 0.47% | 6.30% | 3.03% | 2.40% |




- ஒடிசாவின் ஒட்டுமொத்த 90+ தவறுதல்கள் மார்ச் 2020 உடன் ஒப்பிடும்போது ஜுன் 2021 இல் மேம்பட்டுள்ளது. இது ஜூன் 2020 இல் 3.03% இலிருந்து ஜுன் 2021 இல் 2.40% ஆக குறைந்துள்ளது
- மார்ச் 2021 உடன் ஒப்பிடும்போது ஜூன் 2021 இல் அனைத்து கடன் வழங்குனர் வகைகளிலும் 90+ நாட்கள் தவணை தவறுதல் குறைந்துள்ளது
- வங்கிகள், NBFCகள் மற்றும் லாப நோக்கல்லாத MFIகள் தங்கள் கடன்களை மிகச் சிறப்பாக நிர்வகித்துள்ளன. அவர்களின் 90+ நாட்கள் தவறுதல்கள் ஒடிசாவின் மொத்த தவறுதல்களை விட குறைவாக உள்ளது

நிலுவையில் உள்ள கடன்களின் அடிப்படையில் தவணை தவறுதல்கள் கணக்கிடப்பட்டுள்ளது

EQUIFAX


sidbi




# லட்சிய மாவட்டங்கள்

# ஜூன் 2021ன் படி லட்சிய மாவட்டங்கள் –ஓர் கண்ணோட்டம்

| லட்சிய மாவட்டங்களின் வளர்ச்சி விவரங்கள் | டிசம்பர் 2017 | ஜூன் 2021 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| வாடிக்கையாளர்களை அடைவதில் தீவிரம் (ரூ ஆயிரத்தில்) | 4,155 | 8,143 | 96% |
| வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 14,374* | 30,582** | 113% |
| செயலில் உள்ள கடன்கள் (ரூ.ஆயிரத்தில்) | 6,925 | 12,730 | 84% |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்) | 11,175 | 28,737 | 157% |
| 30+ நாட்கள் தவணை தவறியது | 1.54% | 11.80% | - |
| 90+ நாட்கள் தவணை தவறியது | 0.75% | 2.36% | - |




## 30+ மற்றும் 90+ நிலுவையில் உள்ள கடன்களின் தவணை தவறுதல்கள் – கடன் வழங்குபவர் வாரியாக




- *லட்சிய மாவட்டங்களின் 30 ஜூன் 2021 வரை நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ. 28,737 கோடி. இதில் வங்கிகளின் பங்கு 43% மற்றும் NBFC-MFI இன் பங்கு 36%.*
- *என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ களில் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் மிக அதிகம். அதற்கு அடுத்ததாக சிறுநிதி வங்கிகள் மற்றும் வங்கிகளில் அதிகமாக உள்ளது*
- *டிசம்பர் 2017 முதல் ஜூன் 2021 வரை நிலுவையில் உள்ள கடன்கள் 157% மற்றும் விநியோகத் தொகை 113% வளர்ச்சி கண்டுள்ளது*

**கடன் விநியோகம் – ஜனவரி 2017 முதல் December 2017 வரை*
*** கடன் விநியோகம் – ஜூலை 2020 முதல் ஜூன் 2021 வரை*
*நிலுவையில் உள்ள கடன்களின் அடிப்படையில் தவணை தவறுதல்கள் கணக்கிடப்*

## இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி பற்றி :

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, 1990 இல் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் நிதி, மேம்பாடு மற்றும் ஒத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மை நிதி நிறுவனம் ஆகும். பல ஆண்டுகளாக, சிட்பி அதன் பல்வேறு நிதி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம், சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல நம்பகமான நிறுவனங்களுடன் கைகோர்த்து, மொத்த MSME ஸ்பெக்ட்ரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஷன் 2.0 இன் கீழ் SIDBI, ஃபின்டெக் கடன் வழங்கும் பிரிவில் கிரெடிட் டேட்டா நுண்ணறிவுகளுக்கு, மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் தவிர, எம்எஸ்எம்இ துறையில் தகவல் சமச்சீரற்ற தன்மைக்கு தீர்வு காண, எம்எஸ்எம்இ பல்ஸ், எம்எஸ்எம்இ மற்றும் கிரிசிடெக்ஸின் ஹெல்த் டிராக்கர், எம்எஸ்இ உணர்வுகள் மற்றும் அபிலாஷைகளை அளவிடுவதற்கு, தொழில்துறை கடன் வழங்குபவர்கள் மற்றும் ஃபின்டெக் பல்ஸ் பற்றிய ஒரு விரிவான அறிக்கை, போன்ற பல்வேறு முயர்ச்சிகளை முன்னெடுத்துள்ளது.

## குறுநிதி வெளியில் சிட்பியின் பங்கு :

குறுநிதி நிறுவன இயக்கத்தை ஆதரிப்பதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய குறுநிதி இயக்கத்தை மேம்படுத்துவதில் SIDBI முன்னோடி பங்கு வகித்துள்ளது. மார்ச் 31, 2021 வரை வங்கியின் குறுநிதி முன்முயற்சிகளின் கீழ் ரூ.20,568 கோடி ஒட்டுமொத்த உதவி வழங்கப்பட்டது. இது சுமார் 4 கோடி நிறுவனங்களுக்குப் பயனளித்தது. MFI களுக்கான கடன் மற்றும் பங்கு ஆதரவு, இந்த நிறுவனங்களுக்கான திறன் மேம்பாட்டு ஆதரவு மற்றும் பெருநிறுவன நிர்வாக கலாச்சாரத்தை உள்ளீர்த்துக்கொள்வது, இணக்க மதிப்பீட்டு கருவிகள் (compliance assessment tools) போன்றவற்றை ஆதரிப்பதன் மூலம் நன்கு பூர்த்தி செய்யப்படுகிறது. குறுநிதி தொழில் துறையை, பலவீனமான தொடக்கத்திலிருந்து ஒரு முழுமையான தொழில் பிரிவுக்கு முன்னேற்றுவதில் உதவியது மட்டுமல்லாது, அதன் இணை MFI களில் 8 பேர், சிறுநிதி வங்கிகளாகவும் (SFBs)/ /யுனிவர்சல் வங்கிகளாகவும் மாற்றியதில் சிட்பி பங்கு வகித்துள்ளது. குறு நிதி வழங்குவதில் (micro lending), சிறு கடன்களை நேரடியாக SIDBI இலிருந்து (கூட்டாண்மை ஏற்பாடுகள் மூலம்), வட்டி விகிதத்தில் சந்தை விகிதங்களை விடக் குறைவாகக் கிடைக்கச் செய்தது ஒரு புதுமையான முயற்சியாகும். இந்த "பிரயாஸ்" என்று பெயரிடப்பட்ட முயற்சியின் கீழ், மிகவும் ஏழ்மையில் உள்ள மைக்ரோ கடன் வாங்குபவர்களுக்கு சிறிய அளவு கடன்களை ரூ. 0.50 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை, கூட்டாண்மை ஏற்பாடு மாதிரியின் கீழ், சந்தை விகிதங்களை விட ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி விகிதங்களுடன் இந்த வங்கி வழங்கி வருகிறது.

## ஈக்விஃபாக்ஸ் பற்றி :

ஈக்விஃபாக்ஸ் என்பது உலகளாவிய தகவல் தீர்வுகள் நிறுவனமாகும். இது நம்பகமான தனிப்பட்ட தரவு (data), புதுமையான பகுப்பாய்வு, தொழில்நுட்பம் மற்றும் தொழில் நிபுணத்துவத்தை அளித்து, உலகெங்கிலும் உள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அறிவை நுண்ணறிவுகளாக மாற்றி அதன் மூலம் அதிக தகவலறிந்த வணிக மற்றும் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க உதவும் ஆற்றல் அளிக்கிறது.

அட்லாண்டா, ஜீஏ வை தலைமையிடமாக கொண்ட ஈக்விஃபாக்ஸ், வட அமெரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 24 நாடுகளில் செயல்படுகிறது அல்லது முதலீடு செய்துள்ளது. இது ஸ்டாண்டர்ட் & புவர்ஸ் (S&P) 500® இன்டெக்ஸில் உறுப்பினராக உள்ளது மற்றும் அதன் பொதுவான பங்கு நியூயார்க் பங்குச் சந்தையில் (NYSE) EFX சின்னத்தில் வர்த்தகம் செய்யப்படுகிறது. ஈக்விஃபாக்ஸ் உலகம் முழுவதும் 11,000 ஊழியர்களை பணியில் அமர்த்தி உள்ளது. கடன் துறையில் 120 ஆண்டுகளுக்கும் மேலாக உலகளாவிய பாரம்பரியத்துடன் உள்ள ஈக்விஃபாக்ஸ், 2010 இல் இந்திய சந்தையில் ஒரு இருப்பை நிறுவியது மற்றும் சிஐசியாக(CIC) செயல்பட ரிசர்வ் வங்கியால் உரிமம் பெற்றது. கடந்த 9 ஆண்டுகளில், இந்த கடன் பணியகம், வங்கிகள், NBFC கள், MFI கள் மற்றும் காப்பீட்டாளர்கள் உட்பட 4000+ உறுப்பினர்களாக வளர்ந்துள்ளது. இந்த உறுப்பினர்கள் மில்லியன் கணக்கான இந்திய மக்கள்தொகை மற்றும் அதன் நுகர்வோர்களின் திருப்பிச் செலுத்தும் தகவல்களின் தரவை வழங்குகிறார்கள். 2014 ஆம் ஆண்டில், ஈக்விஃபாக்ஸ் ஒரு பகுப்பாய்வு நிறுவனத்தை வாங்கியதன் மூலம் இந்தியாவில் அதன் தடம் மேலும் வளர்ந்தது. ஈக்விஃபாக்ஸ் அனலிட்டிக்ஸ் பிரைவேட். லிமிடெட் என்பது இந்தியாவில் ஈக்விஃபாக்ஸின் முழுச் சொந்தமான பகுப்பாய்வு நிறுவனமாகும். இது இணையற்ற தனிப்பயனாக்கப்பட்ட பகுப்பாய்வு தீர்வுகளை வழங்கி, வணிகங்களின் செயல்திறன் மற்றும் நுகர்வோரின் வாழ்க்கை இரண்டையும் வளமாக்குகிறது.


**<u>கருத்து மறுப்பு</u>**

இந்த MSME பல்ஸ் அறிக்கையை (அறிக்கை) ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் லிமிடெட் (ஈக்விஃபாக்ஸ்) தயாரிக்கிறது. அறிக்கையை அணுகி பயன்படுத்துவதன் மூலம் பயனர் அத்தகைய பயன்பாடு இந்த கருத்து மறுப்புக்கு உட்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார். இந்த அறிக்கை ஈக்விஃபாக்ஸ் இன் உறுப்பினர்களாக உள்ள குறுநிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஜூன் 2021 தரவுகளின் தகவல்களை கணிசமான அடிப்படையாகக் கொண்டது. அறிக்கையை தயாரிப்பதில் ஈக்விஃபாக்ஸ் நியாயமான அக்கறை எடுத்துக் கொண்டாலும், குறுநிதி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தவறான அல்லது குறைவான தகவல்களால் ஏற்படும் துல்லியம், பிழைகள் மற்றும் / அல்லது குறைகளுக்கு ஈக்விஃபாக்ஸ் பொறுப்பேற்காது. மேலும், ஈக்விஃபாக்ஸ் அறிக்கையில் உள்ள தகவல்களின் போதுமான தன்மை அல்லது முழுமையை உறுதிப்படுத்தாது மற்றும்/அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் அதன் பொருந்தக்கூடிய தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை அல்லது அறிக்கையின் எந்தவொரு அணுகலுக்கும் அல்லது நம்பகத்தன்மைக்கும் ஈக்விஃபாக்ஸ் பொறுப்பல்ல, மேலும் ஈக்விஃபாக்ஸ் அத்தகைய அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படையாக மறுக்கிறது. இந்த அறிக்கை எந்தவொரு விண்ணப்பத்தையும், தயாரிப்பையும் நிராகரிப்பது/மறுப்பது அல்லது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரை அல்ல, அல்லது ஈக்விஃபாக்ஸ் இன் எந்தவொரு பரிந்துரையும் (i) கடன் வழங்கவோ அல்லது கடன் கொடுக்கவோ இல்லை. (ii) சம்பந்தப்பட்ட தனிநபர் / நிறுவனத்துடன் எந்தவொரு நிதி பரிவர்த்தனையிலும் நுழையவோ அல்லது நுழைய கூடாது என்றோ இல்லை. அறிக்கையில் உள்ள தகவல்கள் ஆலோசனையைக் கொண்டிருக்கவில்லை, மேலும் இந்த அறிக்கையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் அதன் கருத்தில் விவேகமான அனைத்து தேவையான பகுப்பாய்வுகளையும் பயனர் மேற்கொள்ள வேண்டும். அறிக்கையின் பயன்பாடு கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2005, கடன் தகவல் நிறுவன விதிமுறைகள், 2006, கடன் தகவல் நிறுவன விதிகள், 2006 ஆகியவற்றின் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. அறிக்கையின் எந்தப் பகுதியும் முன் ஒப்புதல்கள் இன்றி நகலெடுக்கவோ, புழக்கத்தில் விடவோ, வெளியிடப்படவோக்கூடாது.

# தொடர்பு விவரங்கள்

*ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்*

*யூனிட் எண் 931, 3வது தளம், கட்டிட எண் 9,*
*சாலிட்டைர் கார்பொரேட் பார்க்,*
*அந்தேரி காட்கோபார் லிங்க் ரோடு,*
*அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 093*

கட்டணமில்லா எண்.: *1800 2093247*
*ecissupport@equifax.com*

*இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி*
*ஸ்வாவலம்பன் பவன்,*
*ப்ளாட் எண் சி-11, 'ஜீ' ப்ளாக்,*
*பாந்திரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கிழக்கு),*
*மும்பை – 400 051*
*மஹாராஷ்டிரா*

கட்டணமில்லா எண்.: *1800 226753* *www.sidbi.in/en*

பதிப்புரிமை © 2021, Equifax Inc., அட்லாண்டா, ஜார்ஜியா. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. Equifax என்பது Equifax Inc இன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரையாகும்.